## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(14.05.2022 முதல் 18.05.2022)

அறிக்கை எண்: 38/2022 தேதி :13.05.2022

### நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33 °செ முதல் 37 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 °செ முதல் 27 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (14.05.2022 முதல் 18.05.2022)

| கடந்த வார வானிலை (10.05.2022 முதல் 12.05.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (14.05.2022 முதல் 18.05.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 10/05 | நாள்-2 11/05 | நாள்-3 12/05 | தேதி | நாள்-1 14/05 | நாள்-2 15/05 | நாள்-3 16/05 | நாள்-4 17/05 | நாள்-5 18/05 |
| 0.1 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 12 | 4 | 6 | 0 |
| 37 | 33 | 34 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 33 | 33 | 32 | 33 | 33 |
| 26 | 27 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 24 | 24 | 25 | 26 |
| 7 | 6 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 6 | 6 | 6 | 4 |
| 81-60 | 71-52 | 57-69 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-70 | 80-70 | 80-70 | 80-70 | 80-70 |
| 8 | 4 | 7 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 10 | 10 | 10 | 8 |
| தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | காற்றின் திசை | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் கிழக்கு |

### நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் தெளிவாக காணப்படும். 15.05.2022 முதல் 17.05.2022 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32 °செ முதல் 33 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 °செ முதல் 26 °செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-10 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் மேற்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | வரும் நாட்களில் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் கோடை உழவு செய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் பூச்சிகளின் கூண்டுப் புழுக்களை அழிக்கவும். |

| | | |
|---|---|---|
| பசுந்தாள் பயிாகள் | | வரும் நாட்களில் எதிர்பார்க்கப்படும் லேசானது முதல் மிதமான மழையை பயன்படுத்தி பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பை மற்றும் கொழிஞ்சி போன்றவற்றைத் தெளிக்கவும். |
| இறவை உளுந்து | வளர்ச்சி பருவம் | வரும் நாட்களில் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயறுவகை பயறுகளுக்கு நீா் பாய்ச்சுவதை தள்ளிப்போடவும். |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | மழைகாலத்தில் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளுக்கு சளி போன்ற உபாதைகள் ஏற்பட்டால் நுரையீரல் அழற்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மழை சாரல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

**குறுஞ்செய்தி**

வரும் நாட்களில் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயறுவகை பயறுகளுக்கு நீா் பாய்ச்சுவதை தள்ளிப்போடவும்.

**இயக்குநர்**